**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2017

## Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | இந்துநாகரிகம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

(1) "சதக்கிரது" என வேதப்பாடல்கள் குறிப்பிடும் தேவர்
(1) சூரியன் (2) வருணன் (3) உருத்திரன் (4) இந்திரன் (5) யமன்

(2) சிவாகமப் பொருளை முதல் முதலில் தமிழில் தந்தவர்
(1) திருமூலர் (2) சேக்கிழார் (3) வான்மீகி (4) கம்பர் (5) வியாசர்

(3) "பரசுருதி" எனப் போற்றப்படும் நூல்
(1) வேதம் (2) ஆகமம் (3) புராணம் (4) மகாபாரதம் (5) திருமந்திரம்

(4) காஞ்சிப் புராணத்தை தமிழில் பாடியவர்
(1) வீரகவிராயர் (2) பராசரமுனிவர் (3) சிவஞான முனிவர்
(4) பரஞ்சோதி முனிவர் (5) பசவர்

(5) சந்திர குப்தனுடைய நாணயத்தில் பொறிக்கப்பட்ட தெய்வ வடிவம்
(1) முருகன் (2) விஷ்ணு (3) வேல் (4) கருடன் (5) அம்மன்

(6) சங்கீர்ணஜாதி, குணபரன், சித்திரகாரப்புலி என்னும் விருதுப் பெயர்களைக் கொண்டவன்
(1) மகேந்திர வர்மன் (2) இராச சிம்மன் (3) சிம்ம வர்மன்
(4) நந்தி வர்மன் (5) நரசிம்ம வர்மன்

(7) மங்ளாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்துக்கு அடித்தளமிட்டவர்கள்
(1) சைவ நாயன்மார்கள் (2) ஆழ்வார்கள் (3) பல்லவ மன்னர்கள்
(4) சோழ மன்னர்கள் (5) பாண்டியர்கள்

(8) வைணவம் கூறும் பஞ்ச ஞானங்கள்
(1) உபதேசம், திருமண்காப்பு, பேறு, தடை, தகுதி
(2) அவதாரம், ஆவேசம், அமிசம், தகுதி, பேறு
(3) திருமந்திரம், துவைதம்,சரசுலோகம், பலன், தகுதி
(4) தத்துவம், பேறு. தகுதி, உபாயம், பலன்
(5) பரத்துவம், வியூகம், விபவம், அர்ச்சை, தடை

(9) அங்கோ வாட் சிவாலயம் அமைந்துள்ள இடம்
(1) சம்பா (2) ஜாவா (3) தாய்லாந்து (4) மலேசியா (5) கம்போடியா

(10) "சிற்பக்கலைக் களஞ்சியம்" என்று போற்றப்படும் ரதக் கோயில்
(1) தர்மராஜா ரதம் (2) வீமரதம் (3) நகுல ரதம்
(4) அர்ச்சுன் ரதம் (5) பிடாரி ரதம்

(11) சிவனே முழு முதற் கடவுள் என உணர்த்தும் மூர்த்தம்
(1) நடராஜ மூர்த்தம் (2) தட்சணா மூர்த்தி மூர்த்தம் (3) திரிபுராந்தகர் மூர்த்தம்
(4) இலிங்கோற்பவர் மூர்த்தம் (5) அர்த்தநாதீஸ்வரர்

The National e-Learning Portal for The General Education

(12) சோழர் காலத்தில் இசைக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம்
(1) தேவார நாயகம் (2) வாச்சிய மாராயன் (3) வீணாதரன்
(4) வாத்ய வித்தியாதரன் (5) பரிராதினி

(13) "உயர் பிரமம் ஒன்றே அதற்கப்பால் ஒன்றுமில்லை" என்ற கருத்தை குறிப்பிடும் உபநிடதம்
(1) பிரச்சின உபநிடதம் (2) சாந்தோக்கிய உபநிடதம் (3) பிருகதாரணிய உபநிடதம்
(4) முண்டக உபநிடதம் (5) கடேப உபநிடதம்

(14) வான சாஸ்திர ஆய்வின் படி கோள்களின் நிலையைக் கண்டறிந்து முதலில் பஞ்சாங்கத்தை கணித்தவர்
(1) வராகமிகிரர் (2) ஆரியப்பட்டர் (3) கௌதமர் (4) காசிபர் (5) வசிட்டர்

(15) உலகியல் சார்ந்த கலைத்துறைக்கு முதன்மை அளித்த கல்விச்சாலை
(1) வாரணாகி (2) காசி (3) நாலந்தா (4) பாடலிபுரம் (5) தட்சசீலம்

(16) மாவிரதங்கள் எனப்படுபவை
(1) அகிம்சை, வாய்மை, கள்ளாமை,பிரமச்சாரியம், அவாவறுத்தல்
(2) பொய், வன்சொல், புறங்கூறல், வீணுரை, களவு
(3) கொலை,களவு, பொய், மது, காமமின்னை
(4) அவா, பகை, விபச்சாரம், பொய், மது
(5) கொலை, காமம், மது, பொய் களவு

(17) பசு வதையை எதிர்த்து நாட்டை விட்டு வெளியேறியவர்
(1) சிவப்பிரகாச சுவாமிகள் (2) காசிவாசி செந்தி நாதையர்
(3) ஞானப்பிரகாச சுவாமிகள் (4) இராம கிருஷ்ணர் (5) கா.அருணாசல தேசிகர்

(18) விஞ்ஞானகலர் எனப்படுவோர்.
(1) ஆணவம், கன்மம் (2) ஆணவம், மாயை (3) ஆணவம், கன்மம்
(4) ஆணவம், மட்டும் (5) கன்மம், மாயை

(19) சிவஞானபோதத்தின் வழி நூல்
(1) உண்மை விளக்கம் (2) திருவுருட் பயன் (3) கொடிக்கவி
(4) திருவுந்தியார் (5) சிவஞான சித்தியார்

(20) மத்துவர் உருவாக்கிய கொள்கையில் இரண்டும் இரண்டு தான் ஒன்றல்ல என்று குறிப்பிட்ட இரண்டு பொருட்கள்
(1) உலகமும் இறைவனும் (2) ஆன்மாவும் உலகமும் (3) ஆன்மாவும் இறைவனும்
(4) ஆன்மாவும் கன்மமும் (5) உலகமும் பிரம்மமும்

(21) இறைவனை ஆண்டானாகவும் தன்மை அடிமையாகவும் நினைத்து வழிபட்ட நாயனார்.
(1) திருநாவுக்கரசர் (2) திருஞான சம்பந்தர் (3) சுந்தரமூர்த்தி நாயனார்
(4) மாணிக்கவாசகர் (5) சிறுத் தொண்டர்

(22) சூக்கும லிங்கம் அமைந்திருப்பது
(1) கருவறை (2) வசந்த மண்டபம் (3) தம்ப மண்டபம்
(4) யாக சாலை (5) கோபுரம்

(23) சைவ சித்தாந்த கொள்கைகளை தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறும் நூல்
(1) கொடிக்கவி (2) திருமந்திரம் (3) தொல்காப்பியம்
(4) திருவருட்பயன் (5) வேதங்கள்

(24) கிளி உருவில் இருந்து அருணகிரிநாதர் பாடிய பாடல்
(1) திருப்புகழ் (2) கந்தரநுபூதி (3) திருவகுப்பு
(4) கந்தரலங்காரம் (5) வேல்விருத்தம்

(25) விக்கிரகம் அமைப்பதற்குரிய மூலப் பொருள் பற்றிக் கூறும் நூல்
(1) மயமதம் (2) விஷ்ணு தர்மோத்திரம் (3) மான சாரம்
(4) வேதம் (5) தர்ம சாத்திரம்

(26) சைவ சித்தாந்தத்தின் படி இவ் உலகத் தோற்றத்துக்கு காரணமானது
(1) இறைவன் (2) மாயை (3) சத்தி (4) சிவம் (5) சதாக்கியம்

(27) பெரிய புராணத்தில் குறிப்பிடப்படும் தனியடியார்களின் எண்ணிக்கை
(1) 09 (2) 63 (3) 64 (4) 72 (5) 108

(28) அகப் பூசை மூலம் இறைவனின் அருவத் திருமேனியை வழிபடல்
(1) சரியை (2) கிரியை (3) யோகம் (4) ஞானம் (5) பக்தி

(29) பிரபக்தியைக் கைக் கொள்வதன் மூலம் முத்தி கைகூடும் என்னும் கொள்கைக்குரியவர்
(1) சங்கரர் (2) மத்துவர் (3) வியாசர் (4) இராமானுஜர் (5) ஸ்ரீகண்டர்

(30) இறைவனுக்கும் பிரபஞ்சப்படைப்புக்கும் இடையிலான தொடர்பை விளக்கும் இருக்கு வேதப் பகுதி
(1) யம சூக்தம், புருஷசூக்தம் (2) வருண சூக்தம், புருஷசூக்தம்
(3) புருஷசூக்தம், நாசதீய சூக்தம் (4) நாசதீய சூக்தம்,வருண சூக்தம்
(5) யம சூக்தம், புருஷசூக்தம்

✳ **மேல்வரும் இலக்கம் 31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள ஐந்து பெயர்களில் ஒன்று மற்றவற்றோடு பொருந்தாதுள்ளது. அதன் இலக்கத்தை குறிப்பிடுக.**

(31) (1) கங்கை (2) யமுனை (3) காவேரி (4) சிந்து (5) கோதாவரி

(32) (1) வசிட்டர் (2) வாமதேவர் (3) அகத்தியர் (4) அத்திரி (5) நாரதர்

(33) (1) பரதம் (2) சிட்டை (3) கல்பம் (4) சந்தஸ் (5) ஜோதிடம்

(34) (1) சித்தம் (2) பாயு (3) பாணி (4) பாதம் (5) வாக்கு

(35) (1) வாரம் (2) திதி (3) மாதம் (4) நட்சத்திரம் (5) யோகம்

(36) பஞ்சலோகத்தால் முதல் முதலில் படிமக்கலை வளர்க்கப்பட்ட காலம்
(1) சங்க காலம் (2) சங்கமருவிய காலம் (3) பல்லவர் காலம்
(4) சோழர் காலம் (5) நாயக்க காலம்

(37) வீர சைவ நெறியைப் பரப்பிய பெண் அடியார்
(1) செம்பியன் மாதேவி (2) திலகவதியார் (3) அக்மா தேவி
(4) பாண்டிமாதேவி (5) ஆண்டாள்

(38) கோயில் கட்டிடத்தை நிர்மானிப்பதில் தேர்ச்சி பெற்றவன்
(1) கலைஞ்ஞன் (2) மேசன் (3) கட்டிட வல்லுனர்
(4) நிர்மாணி (5) ஸ்தபதி

(39) ஈழத்தில் தோற்றம் பெற்ற முதல் சோதிட நூல்
(1) அக்கினி மித்திரம் (2) சரசோதிமாலை (3) சந்தான தீபீகை
(4) சேகரமாலை (5) வாக்கிய பஞ்சாங்கம்

(40) அத்வைதக் கோட்பாட்டின் திறவு கோலாக அமைவது
(1) மெய்கண்ட சாஸ்திரம் (2) மான சாரம் (3) மயமதம்
(4) மாண்டுக்கிய காரிகை (5) சரஸ்வதீயம்

✳ **இலக்கம் 41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுடன் பொருத்தமானவற்றை தெரிவு செய்க.**

| | | | |
|---|---|---|---|
| A<br>மதம் | B<br>தென்திசை மேரு | C<br>மெய்கண்ட தேவர் | D<br>திருத் தொண்டர் புராணம் |
| E<br>கோரளந்தன் வாயில் | F<br>குரோதம் | G<br>பெரிய கோயில் | H<br>சிவஞான போதம் |
| I<br>ஆகாமியம் | J<br>பன்னிரண்டு சூத்திரம்கள் | K<br>கற்பம் | L<br>பெருவுடையார் |
| M<br>பெரிய புராணம் | N<br>மகிமா | O<br>நான்கு இயல் | P<br>அஞர் |
| Q<br>ஈசத்துவம் | R<br>பிராப்தி | S<br>சேக்கிழார் | T<br>மாக் கதை |

(41) ஆவண மலத்தின் குணங்கள் கொண்ட தொகுதி
(1) A, C, J, K (2) P, H, I, N (3) K, Q, S, T (4) A, F, K, P (5) F, I, H, P

(42) தஞ்சைப் பெருவுடையார் கோயிலுடன் தொடர்புபட்ட தொகுதி
(1) B, G, L, E (2) E, K , H, J (3) G, H, R, T (4) G, A, B, C (5) L, C, G, E

(43) சைவசித்தாந்த முதனூலுடன் தொடர்புடைய தொகுதி
(1) M, C, O, P (2) H, O, L, K (3) J, O, M, Q (4) D, O, P, S (5) C, O, J, H

(44) பன்னிரண்டாம் திருமுறையோடு தொடர்புடைய தொகுதி
(1) S, O, Q, K (2) T, E, A, G (3) M, S, T, D (4) D, J, F, G (5) S, G, F, I

(45) அட்டாங்க யோகத்துடன் தொடர்புபட்டது.
(1) R, F, K, Q (2) N, R, I, Q (3) R, F, E, A (4) Q, R, H, L (5) I, Q, K, M

(46) ஆலயக் கிரியைகளின் போது இடம் பெறும் குற்ற நிவர்த்திக்காக ஆற்றப்படும் கிரியை
(1) பிராயச்சித்தம் (2) கர்ஷ்ணம் (3) பிரதிஷ்டை
(4) காமியம் (5) பிரமோற்சவம்

(47) சிவ வடிவங்களுக்குரிய அளவுப்பிரமாணம்
(1) பஞ்ச தாலம் (2) உத்தம தசதாலம் (3) மத்திம தசதாலம்
(4) மத்திம நவதாலம் (5) உத்தம நவதாலம்

(48) "பிராமணங்கள் அவனியில் நடமாடும் தெய்வங்கள்" எனக் கூறும் பிரமாணம்
(1) ஐதரேயம் (2) சதபதம் (3) கோபதம் (4) தைத்திரியம் (5) கௌஷீதம்

(49) நாட்டார் அறிவியலில் முதன்மை பெறும் மகாவாக்கியமாக கருதப்படுவது
(1) ஆலயம் தொழுவது சாலவும் நன்று (2) அறஞ் செய்ய விரும்பு
(3) ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் (4) முயற்சி திருவினையாக்கும்
(5) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

(50) மாயா காரியங்கள் எனப்படுபவை எவை
(1) சரியை, கிரியை, யோகம், ஞானம் (2) அறம், பொருள், இன்பம், வீடு
(3) தனு, கரண, புவன, யோகம் (4) காலம், கலை, நியதி, அராகம்
(5) சிவன், சக்தி, நாதம், விந்து

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

**தவணைப் பரீட்சை, யூன் - 2017**

**Term Examination, June - 2017**

FWC

| தரம் :- 13 (2017) | இந்துநாகரிகம் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

✳ **பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

(1) இந்து சமய கிரியை பற்றிய அடிப்படைகளையும் சைவ சமயம் பற்றிய கோட்பாட்டு ரீதியான விளக்கங்களையும் ஆகமங்கள் கொண்டுள்ளன.

அ) ஆகமம் கூறும் கிரியை மரபினை விளக்குக.

ஆ) ஆகமத்தின் உட் பிரிவுகளை விளக்குக.

இ) தத்துவ மரபுகள் (7+7+6 = 20 புள்ளிகள்)

(2) தமிழகத்தில் சோழர் காலத்தில் ஏற்பட்ட இந்து நாகரிக வளர்ச்சியின் பிரதான அம்சங்களை மேல் வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.

அ) அரசர்களது பங்கும் பணியும்

ஆ) சைவ வைணவஇலக்கியங்கள்

இ) கலைகளின் வளர்ச்சி (7+7+6 = 20 புள்ளிகள்)

(3) தென் கிழக்காசிய நாடுகளில் இந்துப்பண்பாடு செல்வாக்கு பெற்றவற்றை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.

அ) சமயம்

ஆ) இலக்கியங்களின் செல்வாக்கு

இ) கலை மரபுகள் (7+7+6 = 20 புள்ளிகள்)

## பகுதி II

(4) சைவ சித்தாந்த கோட்பாட்டின் பிரதான அம்சங்களை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

அ) இறைவனின் உண்மைத் தன்மையை நிருபிக்கும் விதம்

ஆ) ஆன்மாவும் மும் மலங்களும்

இ) இறைவனும் ஆன்மாவும்

ஈ) முத்தி (5+5+5+5 = 20 புள்ளிகள்)

(5) சங்கர வேதாந்தம் ஒரு தத்துவக் கோட்பாடாக உருவாகியமை தொடர்பாக மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

அ) பிரமாண நூல்கள்

ஆ) சங்கர வேதாந்தத்தில் பிரமம்

இ) உலகம் பற்றிய கொள்கை

ஈ) முத்திக்குரிய வழிமுறைகள் (2+6+6+6 = 20 புள்ளிகள்)

(6) இந்துப் பண்பாட்டில் இசைக்கலை பெற்றுள்ள முக்கியத்துவத்தினை விளக்கி ஆராய்க. (20 புள்ளிகள்)

(7) புருடார்த்தங்கள் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? இந்துக்களின் வாழ்க்கை நெறியில் அவை ஏற்படுத்தியுள்ள செல்வாக்கினை ஆராய்க. (20 புள்ளிகள்)

(8) மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றி சுருக்கமாகக் குறிப்புகள் எழுதுக.

அ) இருக்கு வேதம்

ஆ) திருக்கோணேஸ்வரம்

இ) இந்துக்கல்விப் பாரம்பரியாம்

ஈ) தட்சணாமூர்த்தி வடிவம்

உ) காணபத்தியம்

ஊ) தயானந்த சரஸ்வதி (5+5+5+5 = 20 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education